[2002 ஏப்ரல் 1

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

(அ) முறையான கடவுச்சீட்டு இன்மையால் கைதாகி வேலூர் சிறையில் உள்ள குவைத் பெண் குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போலி கடவுச்சீட்டு பிரச்சினையில் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் குவைத் பெண் தலால் ஆஸ்மி குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. போளூர் வரதன், திரு. எ.வ. வேலு மற்றும் திரு. லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். கவன ஈர்ப்பாக திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, செல்வி க. பாலபாரதி, திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கை அளிக்கிறார்கள்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத் நாட்டைச் சேர்ந்த தலால் ஆஸ்மி என்ற பெண்மணி முறையான கடவுச்சீட்டு இன்றி இந்தியாவிற்கு, கடந்த 21-3-2002 அன்று வந்திருந்தார். முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் அவர் சென்னை விமான நிலையத்தில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவின்பேரில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு தற்போது அங்கு இருந்து வருகிறார். முறையான கடவுச்சீட்டு மற்றும் விசா ஆகிய ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவில் தொடர்ந்து தங்க முடியாது என்றாலும்கூட, மீண்டும் குவைத் நாட்டுக்குத் திருப்பி அவர் அனுப்பப்பட்டால், அங்கு உள்ள சட்டதிட்டங்களின் அடிப்படையில் அவருக்கு மிகக் கடுமையான தண்டனை கிடைக்க நேரிடும் என்ற அச்சத்தால் அவர் திரும்பிச் செல்ல மறுத்துள்ளார். இந்நிலையில், தலால் ஆஸ்மி என்ற குவைத் நாட்டுப் பெண்மணி இந்தியாவில் தங்குவதற்குத் தனக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்றும், இந்திய குடியுரிமை பெற்றுத் தரப்பட வேண்டும் என்றும், அவர் தனது விருப்பப்படி, தான் நேசித்து வருகின்ற இந்தியரைத் திருமணம் செய்து கொண்டு, இங்கேயே சுதந்திரமாக வாழ உதவ வேண்டும் என்றும் முதலமைச்சராகிய எனக்கு வேண்டுகோள் விடுத்து கோரிக்கை மனு ஒன்றை வேலூர் சிறைத் துறை அதிகாரிகளிடம் அளித்துள்ளார். தான் விரும்பியவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தோடு இந்தியாவிற்கு வந்துள்ள இந்தப்

பெண்மணியின் சோகமான பின்னணி குறித்துச் செய்தி கிடைத்தவுடன் நான் இது குறித்துத் தமிழக அரசின் பொதுத் துறைச் செயலாளர் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரிடமிருந்து அறிக்கையைப் பெற்று விவரங்களை அறிந்தேன். தற்போது வேலூர் சிறையில் காவலில் உள்ள தலால் ஆஸ்மி என்ற பெண்மணிக்கு சிறு உடல் நலக் குறைவு காரணமாக 30-3-2002 அன்று மாலை வேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர் குழுவால் சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டது.

(முற்பகல் 11-15

தற்போது மருத்துவமனையில் உள்ள அவரது உடல்நிலை திருப்திகரமாகவே உள்ளது என அறிகிறேன். இந்த நிகழ்வில் மனிதநேயக் கொள்கையின் அடிப்படையிலும், பெண்ணுரிமை உணர்வு மற்றும் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும்தான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்பதே எனது கருத்து. இருப்பினும், தலால் ஆஸ்மி என்ற குவைத் நாட்டைச் சேர்ந்த இந்தப் பெண்ணுக்கு, இந்தியாவில் தங்குவதற்கு அனுமதி வழங்கவும், அதனையடுத்து இந்தியக் குடியுரிமை வழங்கவும், உரிய அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் உண்டு. குறிப்பாக, மத்திய அரசு சட்டங்களான, வெளிநாட்டுப் பிரஜைகள் சட்டம், 1946 பிரிவு 3 (அ), அதாவது, The Foreigners Act, 1946 Section 3(a) வெளிநாட்டுப் பிரஜைகள் பதிவு செய்த சட்டம் 1939, அதாவது The Registration of Foreigners Act, 1939 மற்றும் இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955, பிரிவு 5 (1)(சி), அதாவது Indian Citizenship Act, 1955 Section 5 (1)(c) ஆகிய மத்திய அரசு சட்டங்களின் அடிப்படையில், தக்க அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பெண்மணிக்கு, இந்தியாவில் தங்க அனுமதியும், பின்னர் இந்தியக் குடியுரிமையும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்திப் பரிந்துரை செய்து, மத்திய அரசுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, குவைத் நாட்டிலிருந்து தக்க ஆவணங்களின்றி இந்தியாவுக்கு வந்துள்ள தலால் ஆஸ்மி என்ற இந்தப் பெண்ணுக்கு முதலில் இந்தியாவில் தங்க அனுமதியும், உடன் இந்தியக் குடியுரிமையும் மத்திய அரசினால் வழங்கப்படும் என்ற அனைவரின் நம்பிக்கையும் விரைவில் ஈடேறும் என்ற எனது எதிர்பார்ப்பினைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. விதி 110-ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கைமீது கூடுதல் விவரங்களைச் சொல்ல அனுமதிக்கிறேன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத் நாட்டிலேயிருந்து இந்தியாவிற்கு வந்துள்ள பெண்மணி குறித்து ஏற்கெனவே விதி 110-ன்கீழ் நான் வெளியிட்ட அறிக்கையுடன் சேர்த்து இன்னும் ஒரு தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சரியான ஆவணங்களின்றி குவைத் நாட்டிலிருந்து வந்த தலால் ஆஸ்மி என்ற பெண்ணிடமிருந்து விண்ணப்பக் கடிதம் பெற்று. அதன் அடிப்படையில் செங்கை கிழக்கு காவல் துறை கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டை அணுகி அவருக்கு ஜாமீன் பெற்றுத் தந்து, அவரை ஜாமீனில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

5. வரவு - செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக உரையாற்ற வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்து, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து சுமார் 98 நிமிடங்கள் இந்த அவையிலே உரையாற்றினார்கள். வருகின்ற வருவாயை அப்படியே செலவு செய்தால் அதை அரசாங்கம் (Government) என்று சொல்கிறோம். அந்த வருவாயிலே ஓட்டை உடைசல் இல்லாமல், திறம்பட நல்ல முறையிலே செய்தால் அதை good Government என்று சொல்கிறோம். வசதி படைத்தவர்களிடமிருந்து வரியை வாங்கி, இல்லாத ஏழை எளிய,